RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1983

# அறஇலக்கியங்களில் கல்வியியல் கோட்பாடுகள்

**மு. விஜயலெட்சுமி [அ, *]**

[அ] தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), பெரம்பலூர்-621212, தமிழ்நாடு, இந்தியா

# Pedagogical Principles in Moral Literature

**M. Vijayalakshmi [a, *]**

[a] Department of Tamil, Dhanalakshmi Srinivasan College of Art and Science for Women (Autonomus), (Affiliated to Bharathidasan University), Perambalur-621212, Tamil Nadu, India

* Corresponding Author:
vijisudhan228@gmail.com

Received: 01-09-2022
Revised: 24-10-2022
Accepted: 03-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Innovation is the best tool for the creator to express what he sees, hears and feels in his life. The innovative creator sets up delicious characters and expresses his own experiences and events he has seen and heard. In earlier times, the lives of the upper caste people were considered as literature in Tamil. As a new wave, the lives of the underprivileged people are also being recorded. Morality is the guiding stone for every human born in this world. Morality is one of the most essential human traits. It can be seen that the authority of morals is explained in Thirukkural by Poiya Lingiyar to the respectable observer of morals.

**Keywords:** Moral, Thirukkural, People, Sangam Literature

## முன்னுரை

மனித இனம் மற்ற உயிர்களிடம் இல்லாத மகத்தான பல பண்புகளைப் பெற்றது. அதில் முதன்மை வாய்ந்த பண்பு கற்றல். கற்றல் என்ற ஓர் சீரிய வளர்ச்சி மட்டும் இல்லாது இருக்குமானால் மனித இனமும் பிறப்பு முதல் இறப்பு வரை மாற்றமில்லாது இருந்திருக்கும். உலகில் மானுட சிமுதாயம் சிறந்து விளங்கவும், சாதனைப் படைக்கவும் அடிப்படையாக அமைவது கல்வியே ஆகும். மனித வாழ்வின் இன்றியமையாத கூறுகளை இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. குறிப்பாக அறநூல்களில் இடம் பெறும் கல்வியியல் கோட்பாடுகளை, சிந்தனைகளை, ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கல்வி என்பதன் பொருள்

‘கல்’ என்பதன் அடிப்படையிலிருந்து கல்வி என்ற சொல் தோன்றியது. கல்வி என்றால் ஆழமாகத் தோண்டுதல் என்று பொருள். நன்மை பயக்கும் பொருள்களைப் பல நூல்களிலிருந்து ஆழமாகத் தோண்டி எடுத்து அறிதல் கல்வி ஆகும். அறியாமையை போக்கி அறிவை விரிவுபடுத்தும் ஆற்றல் வாய்ந்தது கல்வி. மனித வாழ்வை உயர்த்த ஒழுக்க நெறிகளை உண்டாக்கக்கூடியது. கல்வி கடல் போன்றது. அக்கடலில் ஒரு துளி அளவிளான கல்வியையே ஒரு மனிதன் தன் வாழ்நாளில் முயன்று பெறுகின்றான். கல்விக் கடலின் கரையினை கண்டவர் எவரும் இல்லை.

## கல்வியியல் சிந்தனைகள் உருவான காரணம்

களப்பிரர் காலத்தில் அறநெறித் தவறி மக்கள் வாழத்தொடங்கினர். வரலாற்றில் அக்காலக்கட்டத்தை இருண்டகாலம் என்பர். அவர்களை நெறிப்படுத்தவே அறஇலக்கியங்கள் தோன்றின. முந்தையோர் அறத்தையும், பிந்தையோர் பொருளையும், சிலரோ இன்பத்தையும் மையமாகக் கொண்டு வாழ்க்கை அமைத்துக் கொண்டனர். அறச் செயல்களைவிட நன்மை தருவது உலகில் வேறொன்றும் இல்லை. அவற்றை மறப்பதை விடக் கேடு தருவதும் உலகில் வோறொன்றும் இல்லை என்பது வள்ளுவரின் வாக்கு.

மேலும், அறங்களில் தலையாயது கல்வி. அக்கல்வியை கற்கும் முறைப்படி வள்ளுவர் சொல்லும் போது 'கற்க கசடற' என்பார். இத்தொடரில் கசடற என்பது மன மாசற என்னும் பொருள். மன மாசு அறுத்து மக்கள் அறம் பேணி வாழக் கற்றுக் கொடுப்பது தான் உண்மையான கல்வியாகிறது. கல்வி என்பது பண்பட்ட மனம் கொண்ட மனிதர்களை உருவாக்குவது என்பதே சரியான பொருளாகும். சீரிய சமுதாயத்தை உருவாக்கும் நோக்கமே இலக்கியங்களில் கல்வியால் சிந்தனைகள் உருவானது எனலாம்.

## இலக்கியங்களில் கற்றல் கோட்பாடு

ஒரு மாணவன் கல்வியைப் பெற வேண்டிய விதிமுறைகளைக் குறித்து புறநானூற்றில் ஆரியப்படைக் கடந்த பாண்டிய நெடுஞ்செழியன்,

"உற்றுழி உதவியும் உறுப்பொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"

"பிச்சைபுக் காயினும் கற்றல் மிகஇனிதே"

இனியவை நாற்பதில் பிச்சை பெற்றாவது கல்வியைப் பெற வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது (Manickavasagam, 2007). புறநானூற்றில் கல்வியை பெறக் கூடிய மாணவனின் மனம் என்பது பிச்சை எடுக்கக்கூடியவனின் மனம் எப்படி எதைக் கொடுத்தாலும் பெறக் காத்திருக்குமோ அதைப் போல குருவிடம் இருந்து வரும் வார்த்தைகளைப் பெற காத்திருக்க வேண்டும் என்கிறார் (Ramasubirayamaniyam, 2000). இதையே நன்னூலாரும்,

"கேட்டவை கேட்டு விடாதுளத்து அமைத்து"

ஆசிரியர் கூறுவதை மாணவர் கேட்டு தன் மனதில் பதியவைத்துக் கொண்டனர். மேலும் ஆசிரியருக்குப் பணிவிடைச் செய்து கல்வியைக் கற்றனர் என்று விளக்கம் தருகிறார் (Thirugnnasambandham, 2013).

"பருகுவன் அன்ன ஆர்வத்த னாகி

சித்திரப் பாவையின் அத்தக வட்கச்

செவிவாயாக நெவ்சு கள்"

மாணவர் அமைதியாக இருந்து ஆசிரியர் கற்பிப்பதை விருப்பமுடன் ஏற்றுக் கொண்டு பாடத்தைக் கற்பதிலும் கேட்பதிலும் ஆர்வமுடையவனாய் சித்திரப்பாவைப் போல மனமெய் மொழிகளை அடக்கிக் கொண்டு செவிவழியாக கற்பதை உள்ளத்தில் ஏற்க வேண்டும். கற்றதை சேமித்து வைக்கும் களஞ்சியமாக மனதை கையாள வேண்டும் என்ற கருத்தை விளக்குகிறார் (Thirugnnasambandham, 2013). மேலும் நான்மணிக்கடிகையில்,

"கற்றான் தளரின் எழுந்திருக்கும் கல்லாத

பேதையான் வீழ்வானேல்"

என்ற பாடலில் வாழ்க்கையின் நம்பிக்கையே கல்வி என்றும், இளவயதிலிருந்தே கல்வியைக் கற்று வந்தால் அது நம் எதிர்காலத்தின் ஆணிவேராகத் திகழும். அதனால் கற்க வேணடிய இளமைப் பருவத்தில் கல்லாமை பெருந்தீமையாகும் (Gowmareeshwari, 2006). கட்டாயமாக இளமையில் கற்றல் வேண்டும் என்பதை நான்மணிக்கடிகையில்,

“இளமைப் பருவத்து கல்லாமை குற்றம்”

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றது (Gowmareeshwari, 2006). இதனையே ஔவையும், ‘இளமையில் கல்’ என்று வலியுறுத்துகிறார். மேலும், நல்ல நூல்கள் பலவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை ஆத்திச்சூடியில்,

“நூல் பல கல்”

“வித்தை விரும்பு”

“பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய

கற்றலிற் காழினியது இல்”

இப்பாடலில் ஒவ்வொரு நாளும் நல்ல நூல்களைக் கற்க வேண்டும். அவ்வாறு கற்பது இனிமை தரும் என்று விளக்குகிறது (Manickavasagam, 2007).

கல்வியின் மூலம் பெறும் வித்தையை (ஆற்றலை) தொடர்ந்து கற்க ஆசைப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். இக்கருத்தினை பழமொழி நானூற்றில்,

“உணற்கினிய இன்னீர் பிரிதுழஇல் லென்றும்

கிணற்றகத்துத் தேரைப்போல் ஆகார் - கணக்கினை

முற்றப் பகலும் முனியா தினிதோதிக்

கற்றயிற் கேட்டலே நன்று”

கிணற்றுக்குள்ளே வாழும் தவளையானது அந்த நீர் மட்டுமே இனிமையானது என நினைத்து அங்கேயே வாழ்ந்துவிடும் (Selvagesavaraya Mudaliar, 1919). அதுபோல் அல்லாமல் நல்ல கல்வியாளன் தான் கற்றதே சிறந்தது என எண்ணாமல் சான்றோரின் அறிவார்ந்த உரைகளைக் கேட்டாலே மேலும் சிறந்தவர்களாக உயர முடியும் என்கிறது. முதுமொழிக்காஞ்சியில்,

“மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை”

இவ்வரியின் வாயிலாக நல்லறிவுடையவராயினும் கற்றதை மறவாமல் இருத்தல் வேண்டும் (Selvagesavaraya Mudaliar, 1919). கற்றக் கல்வியை மறந்தால் அது பயனற்றுப்போகும். கற்ற கல்வியின் வழியில் வாழ்தல் சிறந்த ஒழுக்கமாகவும் பார்க்கப்பட்டது. அதுவே சான்றோரின் அழகாகும் என்ற கருத்தை அறிந்துக் கொள்ள முடிகின்றது. அழகு மிக்க ஒருவன் கல்லாதவனாக இருந்தால் அழகிருந்தும் அவன் மேதையாவான் என்ற கருத்தினை,

“கண்உடையார் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டும்

புண்உடையார் கல்லா தவர்”

குறளடியின் மூலம் கண் உடையவர் என்று உயர்வாகக் கருதப்படுபவர் கற்றவரே ஆவர் (Mohan, 2012). கல்லாதவர் முகத்தில் இரண்டு கண்கள் இருப்பினும் அது கண்கள் அல்ல புண்களே என்ற கருத்தை வலியுறுத்தி கண் உடையவர் எவராயினும் கற்றலை மேற்கொள்வதே சிறப்பு என்று கூறுகிறார். கல்வியே மனிதனுக்கு அழகு என்ற கருத்தினை,

“குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்

மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து

நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்

கல்வி அழகே அழகு"

இப்பாடலில் ஒருவரின் தலைமயிரைச் சீர்படுத்தி முடிப்பதால் வரும் அழகும், முந்தானையில் கரையிட்ட சேலையின் அழகும், மஞ்சள் பூசுவதால் உண்டாகும் அழகும் உண்மை அழகல்ல, மனதளவில் உண்மையாக நடந்து கொள்கிறோம் என்னும் நடுவு நிலையாம் ஒழுக்க வாழக்கையைத் தரும் கல்வி அழகே மிக உயர்ந்த அழகாகும் (Puliyur Kesigen, 2010). மேலும் திரிகடுகம்,

"கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம் காமுற்ற

பெண்ணுக்கு அணிகலம் நாணுடைமை நண்ணும்

மறுமைக்கு அணிகலம் கல்வியும் மூன்றும்

குறியுடையோர் கண்ணே உள"

என்ற திரிகடுகப் பாடல், எக்குறையும் இல்லாத நேர்மையான ஒழுக்க நெறியைக் கொண்ட மறுப்பிறப்புக்கும் கல்வியே அழகு தரக்கூடிய அணிகலன் என்பதை தெளிவுப்படுத்துகிறது (Aasiriyar Kulu, 2005). கல்வி மனிதனுக்கு அழகு, தேவை, அணிகலன் என்பதை விடவும் மருந்தாகவும் இருக்கும் என்பதனை,

"எம்மை உலகத்தும் யாம்காணோம், கல்விபோல்

மம்மர் அறுக்கும் மருந்து"

என்ற பாடல் வரிகளில், கல்வியானது அறியாமையை நீக்கி, மனித வாழ்வில் தெளிவை உருவாக்கும் மருந்தாகவும் கல்வி விளங்குகிறது. சமூகத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாட்டைப் போக்கவும் ஒருவன் தன் உரிமைகளைப் பெறவும் கல்வியே துணை செய்யும் என்பதனை (Puliyur Kesigen, 2010),

"எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்

அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்"

"ஒரு குடியில் பிறந்த பல்லோருள்ளும்

மூத்தோன் வருகஎன என்னாது

அறிவுடையோன் ஆறுஅரசு செல்லும்"

என்ற பாடல்களில், எக்குடியில் பிறந்தாலும் கற்றோரை மட்டுமே உயர்ந்தவராக கருதுவர். அரசு குடியில் பிறந்தவர் ஆனாலும் அறிவுடையோன் மட்டுமே அரசை ஏற்க முடியும் என்ற உயரிய சமுதாய சிந்தனையைத் தமிழ் இலக்கியங்கள் விளக்குகின்றன (Ramasubirayamaniyam, 2000).

## முடிவுரை

சங்க காலம் முதற்கொண்டு கல்வி பற்றிய சிந்தனைகள் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் இடம்பெற்று வருகின்றன. இருப்பினும் சங்கம் மருவிய காலத்தில் தமிழகத்தில் கல்வி பற்றி சிந்தனைகள் மேலோங்கிக் காணப்பட்டன. கல்வி என்னும் கருவியே மனிதனின் அக இருளை அகற்றி, பேரொளியை ஏற்றும் என்ற உண்மையை உணர்த்த அற இலக்கியங்கள் முயன்றன என்பதையும் அறிய முடிகிறது.

## References


Aasiriyar Kulu, (2005) Thirukadukam, Saradha Pathippagam, Chennai, India,

Gowmareeshwari, S. (2006) Pathenen Keelkanaku, saratha pathippagam, Chennai, India.

Manickavasagam, (2007) Eniyavai Narpathu, Saradha Pathippagam, Chennai, India.

Mohan, R. (2012) Thirukkural, Thiruvalluvar Kalvi Kudam, Chennai, India.

Puliyur Kesigen, (2010) Naladiyar, Saradha Pathippagam, Chennai, India.

Ramasubirayamaniyam, V. T. (2000) Puranaanooru, Thirumakal Nilayam, Chennai, India.

Selvagesavaraya Mudaliar, T. (1919) Muthumozhikanchi, Pachaiyappan College, Chennai, India

Thirugnnasambandham, (2013) Nannool, Kathir Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License